# தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
# TAMILNADU TEACHERS EDUCATION UNIVERSITY

(Established under Tamil Nadu Act 33 of 2008)
Gangaiamman Koil Street, Karapakkam, Chennai – 600 097.
Website: www.tnteu.in

**No.TNTEU/R/Affln./2018/1375** **Date: 30.06.2018**

**Dr.N.RAVINDRANATH TAGORE, Ph.D.**
**REGISTRAR i/c**

**பெறுநர்**

முதல்வர்கள்
தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்துடன்
இணைவுபெற்ற கல்வியியல் கல்லூரிகள்.

ஐயா / அம்மையீர்,

**பொருள்:** தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் - இணைவுபெற்ற கல்வியியல் கல்லூரிகள் - பி.எட்./எம்.எட். பட்ட வகுப்புகள் - 2018-19-ஆம் கல்வியாண்டிற்கான கல்லூரி நாள்காட்டி (College Academic Calendar) தயாரித்து சமர்ப்பிக்கக் கோருதல் - சார்பு.

**பார்வை:** இவ்வலுவலகக் கடித எண்.TNTEU/R/Academic Calendar/1374/நாள்:29.06.2018.

----

மேற்காண் பார்வையில் காணும் கடிதத்தில், தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்துடன் இணைவுபெற்ற கல்வியியல் கல்லூரிகளில் பி.எட்./எம்.எட். பட்ட வகுப்புகளுக்கான 2018-19-ஆம் கல்வியாண்டில் 200 வேலை நாட்களுக்குரிய நாள்காட்டியினை பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ளது.

பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள நாள்காட்டியைப் பின்பற்றி, ஒவ்வொரு கல்வியியல் கல்லூரிகளும், கீழ்க்காணும் தகவல்களை இணைத்து, தங்கள் கல்லூரிக்கான நாள்காட்டியை தயார்செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறது.

- NCTE வழங்கிய அங்கீகார ஆணை குறித்த விவரம்.
- NCTE 2014-ஆம் விதிகளின்படி, கல்லூரியில் மாணவர் சேர்க்கைக்கு அனுமதிக்கப்பட்ட இடங்கள் குறித்த விவரம்.
- தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் வழங்கிய இணைவு ஆணை குறித்த விவரம்.
- கல்லூரி NAAC அனுமதி பெற்றிருப்பின் அதுகுறித்த விவரம்.
- கல்லூரிச் செயலரின் பெயர், தொலைபேசி எண்.
- கல்லூரி முதல்வரின் பெயர், தொலைபேசி எண்.
- கல்லூரியில் பணிபுரியும் பாடவாரியான ஆசிரியர்களின் விவரம்.
- கல்லூரியில் கற்பிக்கப்படும் பாடப்பிரிவுகளின் (Pedagogical Subjects) விவரம்.
- கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள Anti-ragging Committee, Students Grievance Cell, **Internal Complaints Committee** to deal with Sexual Harassment Complaints போன்ற குழுக்களின் ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் குறித்த விவரம், தொலைபேசி எண்.
- கல்லூரியில் செயல்படும் Placement Cell, Environment Club, Red Ribbon Club, YRC போன்ற அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் பெயர், தொலைபேசி எண்.

மேற்குறிப்பிட்டுள்ள தகவல்களுடன் 2018-19-ஆம் கல்வியாண்டிற்கான தங்கள் கல்லூரியின் நாள்காட்டியை பல்கலைக்கழகத்தின் ஒப்புதலுக்கு வருகின்ற **10.08.2018**-ஆம் நாளுக்குள் அனுப்பி வைத்திடுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

பதிவாளர் (பொ)